Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 22 புதன்கிழமை (07-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 246

## புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் குழுக்களை விட்டுத்தள்ளுங்கள்!

# 'ஈழம்' கொள்கையை எட்டிய தீர்வு காணப்பட வேண்டும்!

## தொண்டமான் பேட்டி

கொழும்பு, ஆகஸ்ட் 7

★ விடுதலைப் புலிகள் தங்களால் படையினரைத் தாக்குப் பிடிக்க முடியும் என்று நிரூபித்துள்ளார்கள்.

★ இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமெனில், இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு அப்பாலும் செல்லவேண்டும்.

★ இன்று விடுதலைப் புலிகள் இயக்கம்தான் தேவைப்படுகிறது. ஏனைய இயக்கங்கள் ஒரு பொருட்டல்ல.

★ ஈழம் என்ற பெயரில்லாவிடினும், "ஈழம்" கொள்கையில் உள்ள அர்த்தம் பொதிந்த ஒரு தீர்வு தேவை.

இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் அமைச்சர் எஸ். தொண்டமான்.

கொழும்பு "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையின் 04-08-91 இதழுக்கு வழங்கி யுள்ள பேட்டியொன்றில் அமைச்சர் எஸ். தொண்டமான் இந்த அம்சங்களையும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியின் விவரம் (3 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுப் பகுதியில் நேற்றும் கடும் சண்டை

யாழ்ப்பாணம், ஆக. 7

ஆனையிறவு இராணுவத்தினர் நேற்றுக் காலை 6 மணியளவில் குறிஞ்சாத்தீவு பக்கமாக முன்னேற முயன்றபோது, விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

விமானப் படையினர் வான் தாக்குதலை நடத்த, கடும் ஷெல்வீச்சுக்களை நடத்திக் கொண்டு படையினர் முன்னேற முயன்றனர்.

அப்போது நடந்த கடும் சண்டையில் படையினருக்கு இழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை நேற்று முன்தினம் இரவு பரந்தன் பக்கமாக படையினர் முன்னேற முயன்றனர் என்றும்—

படையினரின் அந்த முயற்சி கைகூடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்—

நேற்று முன்தினம் ஆனையிறவுப் பகுதியில் சண்டையில் 5 படையினர் கொல்லப்பட்டனர்; 20 பேர் காயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-5-15]

## முல்லைத்தீவில் அதிரடி தாக்கு; 8 ஸ்ரீலங்கா படையினர் பலி!

### 3 காவல் அரண்கள் நாசம்; ஆயுதங்கள் மீட்பு!!

யாழ்ப்பாணம், ஆக. 7

முல்லைத்தீவு நகரில் பிரதான வீதியில் உள்ள இராணுவத்தினரின் காவலரண்கள் மீது நேற்றுக் காலை 9. 20 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இந்தத் தாக்குதலில் எட்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மூன்று காவலரண்கள் முற்றாகச் சேதமடைந்தன. பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

சுமார் 30 நிமிடங்கள் வரை நடந்த தாக்குதலில் புலிகள் தரப்பிலும் இரு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம்:-

★ ஏ. கே. எல். எம். ஜி—2

★ அவற்றிற்குரிய ரவைக் கூடுகள் — 6

★ லிங்குகள் — 550

★ ஆர். பி. ஜி — 1

[ 2 ஆம் பக்கம் பார்க்க]

## அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொருளாதாரத் தடை

குறிப்பிட்ட பொருள்களை வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு அனுப்புவதைத் தடை செய்யும் ஒழுங்கு விதிகள், அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிரகடனம் செய்யப்பட உள்ளன!

இவ்விதிகளை எப்படி அறிமுகப்படுத்துவது, அவற்றைப் பின்னர் எவ்விதம் அமுல் நடத்துவது போன்ற சட்ட நுணுக்க அம்சங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியிருக்கிறது.

இத்தகவல்களை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் வெளியிட்டார். [உ-எ]

## வரதராஜப்பெருமாள் ஹிமாசல் பிரதேசத்தில்!

புதுடில்லி, ஆக .7

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ஹிமாசல் பிரதேச மாநிலத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

இப்படி கொழும்பு வெளியுறவு அமைச்சுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய பிரதேச மாநிலம்— சந்தேரி பகுதியில் உள்ள பங்களா ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த திரு. வரதராஜப் பெருமாளுக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து கொலைப் பயமுறுத்தல் கிடைத்ததைத் தொடர்ந்தே அவர் ஹிமாசல் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## காரணம் காட்ட கிட்டுவுக்கு மேலும் 10 நாள் அவகாசம்

லண்டன், ஆக. 7

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கச் சர்வதேசப் பணிமனையின் பொறுப்பாளர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) தம்மை பிரிட்டனிலிருந்து ஏன் நாடு கடத்தக் கூடாது என்பதற்கு காரணம் காட்டுவதற்கு இம்மாதம் 17ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இதனை நேற்றுத் தெரிவித்தார்.

முன்னர் திரு. கிட்டுவுக்கு இன்று 7 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அந்த அவகாசம் மேலும் 10 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

★ வைத்திய வசதி பெறுவதற்கு வழங்கப்பட்ட வீஸா அனுமதியை துஷ்பிரயோகம் செய்தது.

★ தமது இயக்கத்துக்கு ஆயுதம் வாங்குவதற்கென்று லண்டனில் வாழும் தமிழர்களைப் பயமுறுத்திப் பணம் திரட்டியது.

— ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் உள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழ மீட்புநிதி

யாழ்ப்பாணம், ஆக. 7

தீவகம் மற்றும் காரைநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து தமிழீழ மீட்பு நிதி பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஓ]

## ஜேர்மனியில் உள்ள ஈழத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்!

### தூதரகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஆக. 7

ஜேர்மன் அரசு கொண்டுவந்துள்ள புதிய குடியேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரசைகளில் குர்டிஷ் பிரசைகள் ஆப்கனிஸ்தானியர்கள் மற்றும் ஈழத்தமிழர்கள் நாடு கடத்தப்பட மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் இத[illegible] வெளியிட்டார் என்று "சண்டே ரைம்ஸ்" செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

31-12-1988 க்கு முன்னர் ஜேர்மனுக்கு சென்ற ஈராக் [illegible] மட்டுமே இவ்விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும் தூதரகப் பேச்சாளர் மேலும் சொன்னார்.

புதிய குடியேற்றச் சட்டத்தின் கீழ் இலங்கை உட்பட 9 நாடுகளைச் சேர்ந்த - ஆயிரக்கணக்கானோரை - அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட காரணத்திற்காக நாடு கடத்தப் போவதாக ஜேர்மன்

[ 2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

நல்ல நிலையில் உள்ள Ladies Cycle தேவை. தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
[17746]

### போத்தல்கள் தேவை

ஜாம் போத்தல்கள், சோஸ் போத்தல்கள் (Jam Bottles, Sauce Bottles) ரூபா /3-இற்கு குறையாமல் கொள்வனவு செய்யப்படும். Tasteline Industries (pvt.) Ltd., 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4227)

### ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூடோ என்ரப்பிறைசஸ், 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யர்ழ்ப்பாணம்.
(சி-0277)

## ஜேர்மனியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அரசு முன்னர் அறிவித்திருந்தது.

குர்டிஷ் மக்கள் வாழும் ஈராக், ஆப்கனிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகளிலும் நிலவும் தற்போதைய அரசியல் நிலைவரம் காரணமாகவே இவ்விதிவிலக்கு அளிக்கப்படுவதாகவும் அப்பேச்சாளர் கூறினார்.

இதன் அர்த்தம், 1988 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஜேர்மன் வந்துள்ள இந்த மூன்று நாடுகளைச் சேர்ந்தவர்களும் கூண்டோடு (en masse) நாடு கடத்தப்படுவார்கள் என்பதல்ல என்று கூறிய கொழும்பு ஜேர்மன் தூதரகப் பேச்சாளர் —

1988 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஜேர்மன் வந்து சேர்ந்த ஒவ்வொருவரின் தஞ்சம் கோரும் விண்ணப்பமும் தனித்தனியாக இவ்வாண்டு முடிவில் பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னார்.

ஜேர்மனியில் தற்போது வசிக்கும் சுமார் 40 ஆயிரம் ஈழத்தமிழரில் பெரும்பாலானோர் 31-12-1988 க்கு முன்னர் அங்கு சென்றவர்கள் என்றும் ஜேர்மன் தூதரகப் பேச்சாளர் சொன்னார்.

புதிய சட்டத்தின்படி, அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட வெளிநாட்டாரின தலைவிதி நிர்ணயிக்கும் அதிகாரம் இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜேர்மன் நாட்டு உள்துறை அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னர் இந்த அதிகாரம் ஜேர்மனியில் உள்ள 16 மாநில அரசுகளுக்கு வழங்கப்பட டிருந்தது.

## முல்லைத்தீவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ அதற்குரிய ஷெல்கள்—3
★ புறொப்ளர்கள் — 3
★ ரி. 56—2 ரகத் துப்பாக்கிகள் —3
★ அவற்றுக்குரிய ரவைக் கூடுகள் — 4
★ ரி. 81 ரகத் துப்பாக்கிகள் — 3
★ அவற்றுக்குரிய ரவைக் கூடுகள் — 8
★ நடுத்தர ரவைகள்—964
★ தொலைத் தொடர்பு சாதனம் — 1
★ குண்டு துளைக்காத கவச அங்கிகள் — 4

இரண்டாவது லெப்டினன்ட் பானு [திருச்செல்வன் செந்தில்குமார் — முல்லைத்தீவு], இரண்டாவது லெப்டினன்ட் கீரன் [சின்னத்தம்பி ரமேஷ் குமார்—குமுழமுனை] ஆகிய இரு போராளிகளே வீரமரணம் அடைந்தவர்கள் ஆவர்.
(ஓ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### வேலுப்பிள்ளை சபாரத்தினம்

மலர்வு: 1926 – 1 – 16
உதிர்வு: 1991 – 7 – 8

என்னுயிரே! என்னினிய மன்னவனே இன்னமுதே பொன்னுலகம் நீயேன் பிரிந்து சென்றாய் - உன்னை இனி இப் பிறப்பில் எங்கே இனிக் காண்பேன் ஐயா நீ ஒப்பிலா மாமணி அன்றோ.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ச. மீனாம்பிகை
(மனைவி)

தெல்லிப்பளை மேற்கு.
கொல்லங்கலட்டி.
[17747]

## கண்ணீர் அஞ்சலி



வீர ஜனனம்: 26 — 09 — 1964
வீர மரணம்: 27 — 07 — 1991

### மேஜர் குகதாஸ்

### இராஜரட்ணம் இராசேந்திரன் (இந்திரன்)

27-07-1991 இல் ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரமரணம் அடைந்த வீரவேங்கை.

நாட்டின் விடுதலைக்கு தமதுயிரை–
நாம் அளிக்க வேண்டுமென எண்ணிய – மாவீரனே
காடையர்கள் செய்கின்ற பாதகத்தை பார்க்காத –
மாவீரனே
காடையர்கள் முகாமில் சட்டென பாய்ந்தாயோ
படையினரை அழித்திட வேண்டுமென
நினைத்துப் போனாயோ ஆனையிறவு முகாமுக்குள்
வீரத்துடன் மடிந்தாயே மாவீரனே
நாளை தமிழ் ஈழம் கிடைப்பது உறுதி.

– குடும்பத்தினர்,

உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.
[17743]

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணக வரவு: 27 — 03 — 1937



விண்ணக வரவு: 08 — 08 — 1990

அமரர்

### வஸ்தியாம்பிள்ளை யேசுதாசன்

என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே!
என் மரணத்திலும் என்னை மறவாதிர்கள்.

எம் நெஞ்சை விட்டகலாத அன்பின் அணையர்த தீபமாக விளங்கி எம்மையெல்லாம் சொல்லொணாத் துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற உமது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 08-08-1991 வியாழக்கிழமை காலை 6-00 மணிக்கு புனித ஸ்நாபக அருளப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், பேரன்.

466/1/1, புனித யுவானியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[17732]

## அறிவித்தல்

சுன்னாகம் ஸ்ரேஷன் வீதியில் அமைந்துள்ள ராஜன் பார்ண் சாலையும், கடையும் தவிர்க்க முடியாத காரணங்களால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால், வாடிக்கையாளர்கள் தமக்குரிய வருமதியைப் பெற்றுக்கொள்ளவும் தம்மால் கொடுக்க வேண்டிய பாக்கியை செலுத்தவும் 7 - 8 - 91 புதன் தொடக்கம் 16 – 8 – 91 வெள்ளி வரையும், காலை 9 மணிக்கும் மாலை 2 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்.

உரிமையாளர்,
ராஜன் பேக்கரி.

ஸ்ரேஷன் றோட்,
சுன்னாகம்.
(சி-0278)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### வீரவேங்கை ஜேம்ஸ்

(சி. மணிவர்மன்)
[பருத்தித்துறை]

தாயின் மடியில்: 04 – 05 – 1973
மண்ணின் மடியில்: 07 – 08 – 1989

தாயகத்தின் மீட்பினுக்காய்
தன்னுயிரை நீத்த ஜேம்ஸ்
நீ யொருத்தன் மட்டுமல்ல
நீண்ட ஒரு பயணமதில்
களத்தில் பேயரினால் குதறப்பட்டு
களப்பலியானவர்கள்
ஆயிரமாய் பெருகிடினும்
ஆறவிடோம் இலட்சியத்தை
வடமராட்சி தந்த ஒரு
வீரவேங்கை உந்தனுக்கு
தலை தாழ்த்தி வணங்குகிறோம்
தாய் நாட்டை மீட்டிடுவோம்.

உன் பிரிவால் வாடும்:
உற்றார், உறவினர்கள்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.
[சி-0331]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 28 – 04 – 1949

விண்ணில்: 07 – 08 – 1988



### வரப்பிரகாசம் போல்

(பொலீஸ் உத்தியோகத்தர்)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த குலக் குன்றமே! மூன்றாண்டு மறைந்திடினும், ஆழ்கடல் வற்றினாலும் எம் அன்பு வற்றாத அன்புத் தெய்வத் தந்தையே! எம்முயிர் உள்ளவரை உம் நினைவு நீங்காதையா! உமது அன்புப் பாசத்தைக் கொட்டி அணைத்த தந்தையே! நீரே வழிகாட்டியும், இலட்சிய தீபமாய் விளங்க முன் எடுத்து வாழ்வதே நாம் உமக்குச் செய்யும் நன்றியப்பா.

உமது பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(17742)

## மரண அறிவித்தல்

### பொ. இந்திரகாசன் [வாசு]

16, கில்னர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை இந்திரகாசன் [வாசு] ஆனையிறவு நேரடி மோதலில் வீரமரணம் அடைந்துவிட்டார்.

இவர் பொன்னுத்துரை–புவனேஸ்வரி அவர்களின் அருமை மகனும்; கமலகாசன், சந்திரகாசன், வாசுகி, பிரபாலினி ஆகியோரின் அருமைச் சகோதரனும், வைத்தீஸ்வரா கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
கதிரிப்பிள்ளை பொன்னுத்துரை

[17473]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### விழுந்தும் மண் படவில்லை?

ஆனையிறவு இராணுவ முகாம் முற்றுகையை உடைத்தது, தாம் ஈட்டிய ஒரு பெரும் வெற்றி என்று அரசாங்கப் படையினரும், அரசாங்கமும், கொழும்புப் பத்திரிகைகளும் கருதுகின்றன போலும்!

கடந்த சனிக்கிழமை இரவுக்குப் பின்னர் படை உயர் அதிகாரிகளும், பத்திரிகைகளும் வெளியிடும் கருத்துகள் அதனையே பிரதிபலிக்கின்றன.

ஆனையிறவு முகாமைச் சுற்றி மேலும் பல சிறிய முகாம்கள் அமைக்கப்படும். அடுத்த கட்டத் தாக்குதலை யாழ்ப்பாணம் வரை நடத்துவோம் — இவ்வாறு இராணுவ உயர் அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள்.

அவற்றையும் ஒரு படி மிஞ்சி, ஆனையிறவு முகாமுக்குள் அரசாங்கப் படைகள் நுழைந்து விட்டதைச் சுட்டிக்காட்டி, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்று கொழும்புப் பத்திரிகைகள் எழுதியுள்ளன.

அரசாங்கத்தின் அத்தனை வளங்களையும், வசதிகளையும் பயன்படுத்தி இயங்கும் ஒரு நாட்டின் மூன்று படையினராலும், விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் சிக்குண்ட தமது சகபாடிகளை மீட்பதற்கு 24 நாள் முயற்சியும், கடும் உழைப்பும் தேவைப்பட்டது!

அரசாங்கத்துக்கு மூன்று படைகள். விடுதலைப் புலிகளிடமோ ஒரு தரைப்படை தான். விமானத் தாக்குதல், கடல் வழித் தரையிறக்கம், கடல் வழித் தாக்குதல், பல மடங்கு ஆட்பலம், கனரக ஆயுதங்கள் - கனரக ஆயுதத் தளபாடங்கள் ஆகிய ஐந்து மேலதிகப் பெறுமானப் பலங்கள் அரசபடைகள் வசம் இருந்தன.

அந்தப் பலங்களை வைத்திருப்பவர்கள் ஆகக் கூடியது மூன்று நாட்களிலாவது முற்றுகையை உடைத்திருந்தால், வெற்றி கொண்டார்கள் என்று இராணுவ ஆய்வில் ஓரளவிலேனும் கொள்ள முடியும்.

ஆனால்—

பெரும் பொருட் செலவின் பின்னரும், குறிப்பிடத்தக்க படை இழப்பின் மத்தியிலும் முற்றுகையை உடைப்பதற்கு அரசாங்கத்திற்கு மூன்று வாரங்களும், மூன்று நாட்களும் சென்றன!

ஆனையிறவு முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றவில்லை என்பதால் அவர்கள் தோல்வி அடைந்ததாகப் புள்ளி போட முடியாது. சகல வசதிகளும் கொண்ட ஒரு பெரும் படையை, 24 நாட்களாக ஆனையிறவில் சிக்கிய சிப்பாய்களை அணுக முடியாமல் தடுத்து வைத்திருந்ததே ஒரு பெரும் சாதனை.

இதனைச் சிறிதும் கணக்கில் எடுக்காமல், தமது தோல்வியை மறைக்கும் விதத்தில், படை அதிகாரிகளும், கொழும்புப் பத்திரிகைகளும் பேசுவது வியப்பாக உள்ளது. விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறும் மல்யுத்தக்காரனின் நிலையில் இவர்கள் நிற்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

இராணுவ நடவடிக்கையால், அதன் மூலம் கிடைக்கும் வெற்றியினால் ஓர் இராணுவ மேலாதிக்க நிலையைத் தாம் எய்தித்தரமுடியும் என்று அரசாங்க உயர் மட்டத்துக்கு உணர்த்துவதற்காகவே இராணுவ அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்.

அவர்களின் இந்த மூடிமறைத்தலை அரச தலைமைப் பீடம் ஏற்றுக்கொண்டு, அதன் வழி நடக்க முயன்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பது வெறும் கானல் நீராகவே முடியும்.

# கலிபோர்னியாவில் தமிழீழ மாநாடு திட்டமிட்டவாறு 3 நாள் நடந்தது

## சிங்களவர்கள் சிலர் ஆர்ப்பாட்டம்

கலிபோர்னியா, ஆக. 7

''தமிழீழ ஆய்வு மாநாடு'' திட்டமிட்டபடி, கலிபோர்னியர் பல்கலைக் கழகத்தில் கடந்த மாதம் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெற்றது.

சர்வதேச தமிழர் ஒன்றியமும், கலிபோர்னியா பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய ''அரசாங்கம் இல்லாத ஒரு நாடு'' [A nation without a state] என்ற இந்த மாநாட்டில் அமெரிக்காவில் இருந்து மட்டுமன்றி, ஏனைய மேற்கு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் கலந்து கொண்டனர். பேராசிரியர் கே. பாலச்சந்திரன் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

மூன்று நாள் மாநாட்டில் தமிழீழத்துக்கான அரசியல் அமைப்பு, மற்றும் சட்டவாக்கம் சம்பந்தமாகவும், பொருளாதார வளர்ச்சிக்கான வளங்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் கருத்தரங்குகள் நடைபெற்றன. நூற்றுக்கும் அதிகமான ஆய்வுரைக் கட்டுரைகளும் படிக்கப்பட்டன.

இந்த மாநாட்டைக் குழப்புவதற்கு அமெரிக்காவில் உள்ள சிங்களச் சக்திகள் சில திட்டமிட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து கலிபோர்னியா பொலீஸார் மாநாட்டுக்குப் பாதுகாப்பு வழங்கி இருந்தனர்.

மாநாடு ஆரம்பமான 15 ஆம் திகதி சிங்களவர்கள் சிலர் பல்கலைக்கழக வளாகத்துக்கு முன்னால் கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

''ஸ்ரீலங்கா ஒரே நாடு'' ''ராஜீவைக் கொன்றது யார்?'' ''ஸ்ரீலங்கா பிளவுபட அனுமதிக்க முடியாது'' என்ற சுலோகங்கள் உட்பட மற்றும் பல தமிழீழ எதிர்ப்புச் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

எவரும் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. மாநாட்டில் கலந்துகொண்ட மேலை நாட்டு அறிஞர்கள் பலரும் அவர்களைப் பார்த்து சிரித்தபடி மாநாட்டு மண்டபத்துக்குச் சென்றனர். சிலர் அவர்களைப் புகைப்படம் பிடித்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களில் பலரும் தங்கள் முகங்களை சுலோக அட்டைகளால் மறைத்துக் கொண்டனர். இறுதியில் ''நமோ நமோ மாதா'' கீதத்தை பலத்த தொனியில் இசைத்துவிட்டுக் கலைந்து சென்றனர். பொலீஸார் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

[அ]

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 7

யாழ் பல்கலைக் கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான விசேட பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 11.30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

[ஒ]

## காரணம்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துறை அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

இலங்கையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அஞ்சுவதற்கான சிறந்த ஆதாரம் அவருக்கு இல்லையாதலினால் அரசியல் தஞ்சம் பெறுவதற்கு அருகதையற்றவர் என திரு. கிட்டுவிற்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் லண்டனில் உள்நாட்டலுவலகம் தெரிவித்துள்ளது.

திரு. கிட்டு மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவர் பதிலளிப்பதற்கு உள்துறை அமைச்சு போதிய சந்தர்ப்பம் வழங்கவில்லை என்று—

அவர் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி திரு. டேவிட் பார்ஜேர்ஸ் குற்றம்சாட்டினார்.

ஆயுதம் வாங்குவதற்கு என்று திரு. கிட்டு, லண்டன் தமிழர்களிடம் பணம் பறித்தார் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. அதனை உள்துறை அமைச்சு நிரூபிக்கவில்லை என்றும் திரு. பார்ஜேர்ஸ் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

(அ-எ)

# 'ஈழம்' கொள்கையை எட்டிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வருமாறு:-

கேள்வி: இந்தியாவில் உள்ள அகதிகளை இலங்கைக்கு திருப்பிக் கொண்டு வரும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது இது சாத்தியமானதா?

பதில்: உள்ளூர் நிலை திருப்திகரமானதாக இருப்பின் இது சாத்தியமானதே. அமைதி ஏற்படும் வரை அகதிகளை திருப்பிக் கொண்டு வருவதை நினைத்துப்பார்க்க முடியாது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டால் தான் இது சாத்தியமாகும்.

கே: விடுதலைப் புலிகளுடனான சண்டை ஆரம்பமாகி ஓராண்டாகி விட்டது. இம் மோதல் முடிவை நெருங்கி விட்டதா?

ப: முட்டுக்கட்டை நிலையைத் தான் நாம் அடைந்துள்ளோம்.

ஆனையிறவுப் போர் அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அரசு அனுப்பிய பல்லாயிரக் கணக்கான படையினர் முன்னாள் நின்று தாக்குப் பிடிக்க முடியும் என்று விடுதலைப் புலிகள் காட்டி உள்ளனர்.

பல வருட காலயுத்தத்தின் பின்னர் ஆயுதம் மறறும் ஆட்பலம் தம்மிடம் உண்டு என்பதனையும் விடுதலைப் புலிகள் காட்டி உள்ளனர்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்தைப் போன்று ஆட்திரட்டலை பகிரங்கமாகச் செய்யவில்லை. என்றாலும் அரசின் ஆட்திரட்டலுக்கு ஏற்றதாக அவர்களின் ஆட்திரட்டலும் அமைந்திருக்கிறது. அவர்களிடம் ஆயுதங்களும் உண்டு.

மேலும் விடுதலைப் புலிகள் 'பொடியன்' கள் போல் தெரியவில்லை. ஏனைய படையினர் போன்றே தெரிகின்றனர். ஆகவே தான் இந்த முட்டுக்கட்டை நிலை.

இம் முட்டுக்கட்டையை நீக்க ஒரே மார்க்கம் பேச்சுவார்த்தை என்பது தான் எனது அபிப்பிராயம்.

கே: விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தும் சாத்தியம் உண்டா?

ப: இரு தரப்பிலும் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் உண்டு. ஆனால் சாதகமான செயற்பாடுதான் காணப்படவில்லை. இரு தரப்பாரும் தாம் வெற்றியீட்டலாம் என்று எண்ணுகின்றனர்.

தாம் வெல்ல முடியாதென இரு தரப்பினரும் எப்போது எண்ணுகின்றனரோ, அப்போதுதான் இரு தரப்பினரும் ஓர் உடன்பாட்டுக்கு வரத் தயாராகுவர். ஆனால் இரு தரப்பினராலும் வெற்றியீட்ட முடியாது என்பதே பொதுவான கணிப்பு. போரினால் மக்கள் தான் துன்பப்படுகிறார்கள்.

### நான் முயற்சித்தேன்

கே: பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிக்க நீங்கள் முயற்சித்தீர்களா?

ப: ஆம். இடைத்தரகர் [Intermediaries] மூலம் முயற்சித்தேன். பலனளிக்கவில்லை. இடைத்தரகர் மூலம் முயற்சிப்பது கஷ்டமான காரியமாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமைத்துவத்தின் உண்மையான சிந்தனையை இடைத்தரகர் மூலம் அறிய முடியாது.

தலைமைத்துவத்தின் நெருங்கிய தொடர்பு உண்டு என நினைத்து அவர்கள் சாதாரணமாக முயற்சிப்பார்கள். ஆனால் அவர்கள் கூறுவது எம்மை தவறாக வழி நடத்துவதாக அமைந்துவிடும்.

### அரசை நம்பலாமா என்று கேட்பர்

கே: விடுதலைப் புலிகளுடனான கடந்த கால அனுபவங்களை வைத்துப் பார்த்தால், விடுதலைப் புலிகளை நம்பலாம் என்று நீங்கள் அபிப்பிராயப்படுகிறீர்களா?

ப: இப்போது உள்ள கேள்வி நம்புவது பற்றியது அல்ல. நாட்டு நலன் கருதி, நாம் ஒரு புரிந்துணர்வுக்கு வரவேண்டியுள்ளது. நாம் ஒரு தீர்வுக்கு வரவேண்டும். இல்லாவிடில் விடுதலைப் புலிகளும் ''அரசை நாம் நம்பலாமா?'' — என்று திருப்பிக் கேட்பர்.

விடுதலைப் புலிகளும் அரசும் சேர்ந்து தான் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

ஒரு தரப்பு சண்டையை நிறுத்துவதற்கான சூழ்நிலையை மற்ற தரப்பு ஏற்படுத்த வேண்டும். இதுவே இன்றைய நிலைவரம்.

### இந்தியாவால் தீர்வில்லை

கே: இன்றைய கட்டத்தில் இந்தியா என்ன பங்கு வகிக்க முடியும்?

ப: முன்னர் இந்தியா பங்கு வகித்தது. அது எம்மை ஒரு தீர்வுக்கு கொண்டு வந்து விடவில்லை. ஒப்பந்தம் வந்தது; அமைதிப்படையும் வந்தது. இரண்டு வருடங்கள் அமைதிப்படையினர் வடக்கு-கிழக்கில் தங்கியிருந்தும் தீர்வு வரவில்லை.

கே: இலங்கையில் மீண்டும் இராணுவ ரீதியில் இந்தியா பங்களிப்புச் செய்யும் சாத்தியம் உண்டா?

ப: அது அரசாங்க இராணுவத்தில் தான் தங்கியுள்ளது. இந்திய உதவி அவசியம் தேவை என்று எமது இராணுவம் கருதும் வரை, இந்திய இராணுவத்தின் பங்களிப்புக்குதேவை ஏற்படாது. எனவே இது பற்றி எமது இராணுவத்தினால் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

### ஒப்பந்தத்துக்கு அப்பால் போகவேண்டும்

கே: விடுதலைப் புலிகளுடனான தீர்வு பற்றி பேசுகிறீர்கள். ஏற்கனவே இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்று உண்டே!

ப: அந்தக் கட்டத்தை நாம் தாண்டி விட்டோம். விடுதலைப் புலிகள் கூறுவது போல் அந்த ஒப்பந்தம் தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் அது போதாது. அந்த ஒப்பந்தத்திற்கு அப்பாலும் சென்று நாம் பார்க்க வேண்டும். எந்த ஒரு தீர்வுக்கும் அந்த ஒப்பந்தம் ஓர் அடிப்படையாக இருக்க முடியாது.

### ஏனைய குழுக்கள் பொருட்டல்ல

கே: ஏனைய தமிழ்க் குழுக்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டனவே.

ப: அவர்கள் ஒரு பொருட்டல்ல. (They mean nothing) இரண்டு பாத்திரங்களில் அவர்களால் செயற்பட முடியுமா; (Can they Count for two soles?)

இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் தான் தேவையாக உள்ளது.

இதனை நாம் உணரும் வரை, எந்த இடத்தையும் நாம் அடைய முடியாது. ஏனைய குழுக்களின் போர்வைக்குள் நாம் மறைந்து கொள்ள முடியாது. அது அர்த்தமற்றது. அப்படிச் செய்வது யதார்த்த நிலையின் உண்மையை உணரத் தவறுவதாகத்தான் முடியும்.

கே: இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கே பலத்த எதிர்ப்பு இருந்தது. அந்த ஒப்பந்தத்திற்கு அப்பாலும் சென்று தீர்வு ஒன்றைக் காணுவது இன்னும் மோசமான நிலையை ஏற்படுத்தும் என்று எண்ணவில்லையா?

### எதிர்ப்பு என்ற போர்வைக்குள் மறையக் கூடாது

ப: எதிர்ப்பு எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும். பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தோம். இந்திய - இலங்கை ஒப்பந்தம் வந்தது. ஆகவே நாம் எவ்வளவு அதிகமாக எதிர்க்கின்றோமோ, அவ்வளவு கூடுதலாக நாம் விட்டுக் கொடுக்க வேண்டிவரும்.

தலைவர்கள் இதனை உணர்ந்து, நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண வேண்டும். தலைமைத்துவத்தின் பண்பு அதுவாக இருக்க வேண்டும். எதிர்ப்பு இருக்கிறது என்று கூறி அந்த போர்வைக்குள் மறைந்து கொள்வது எமக்கு உதவாது. தலைவர் என்பவர் தலைமை வகித்து வழி நடத்த வேண்டும்.

நாட்டின் நலன்களைக் கருத்திற் கொண்டதாக தலைமைத்துவம் இருக்க வேண்டும். இல்லை என்றால் அவர்கள் தலைவர்கள் அல்லர்.

தமிழரின் அபிலாஷைகளை திருப்தி செய்வது குறித்து நேர்மையான, உள்ளத் தூய்மையான முயற்சி இருக்க வேண்டும்.

### அரசியல் லாபம் கருதக்கூடாது

பண்டா - செல்வா மற்றும் இந்திய - இலங்கை ஒப்பந்தங்கள் போன்று தற்போதைய சந்தர்ப்பத்தை நாம் தவறவிடின் மேலும் பிரச்சினைகள் ஏற்படும் அரசியல் லாபம் கருதி நாட் கடத்தக் கூடாது.

ஆகக் கூடிய அதிகாரப் பரவல் எது என்பது பற்றி முடிவு செய்யப்படவேண்டும். இது அரசு மற்றும் எதிர்க் கட்சிகளின் ஆசியுடன் அறிவிக்கப் படவேண்டும். மேலும் அந்த முடிவு 1987 ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கலுக்கு அப்பாலும் போகவேண்டும்.

### புலிகள் ஏற்பார்களா?

கே: அரசியல் தீர்வு ஒன்றை விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளும் என்று நீங்கள் முழுமையாகக் கருதுகிறீர்களா?

ப: இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலும் பார்க்கக் கூடுதலாக ஈழத்திற்கு கொஞ்சம் குறைவாக ஒரு தீர்வு இருப்பின், அத்தகைய அரசியல் தீர்வு ஒன்றை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளும் சாத்தியம் உண்டு. உடன்பாடு காணப்படும் அரசியல் தீர்வு, விடுதலைப் புலிகளினால் தமிழர்களை ஏற்றுக் கொள்ள வைக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

அதற்காக -

ஈழம் என்ற பெயரில்லாவிடினும் 'ஈழம்' கொள்கையில் உள்ள அர்த்தம் அந்த தீர்வில் இருக்கவேண்டும்.

(அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரைக்கு அருகே தகவல் தொடர்பு சாதனம்!

### தேடி பொலீஸார் வேட்டை

மதுரை மாவட்டத்தில் இலங்கை போராளிகளின் தகவல் தொடர்பு சாதனங்கள் இயங்குகின்றன என்று இராமேஸ்வரம் பகுதியில் நிலை கொண்டுள்ள இந்தியக் கடற்படைப் பிரிவினர் தகவல் கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து, அப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை பொலீஸார் ஆரம்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

மதுரைக்கு நேராக உள்ள கடலில் தாம் சந்தேகத்திற்குரிய ஒலி அலைகளை பதிவு செய்திருப்பதாக இந்திய கடற்படையினர் கூறினர்.

இதன் மூலம், மதுரைக்கு அருகில் தகவல் பரிமாறிக் கொள்ளும் வகையில் வானொலி நிலையம் ஒன்றை விடுதலைப் புலிகள் அமைத்திருக்கலாம் என்றும்—

இது உண்மை என்றால் அதனைத் தம்மால் விரைவில் கண்டுபிடித்துவிட முடியும் என்றும் - இந்திய கடற்படையினர் கூறியுள்ளனர்.

(அ-இ-எ)

## போராளிகளுக்கு உதவிய இருவர் திருச்சியில் கைது!

சென்னை, ஆக. 7

இலங்கைப் போராளிகளுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தில் திருச்சி மாவட்டத்தில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர்களில் ஒருவர் முருங்கைப்பேட்டைக் கிராமத்தைச் சேர்ந்த ஹோமியோபதி வைத்தியர் என்று கூறப்படுகிறது. மற்றையவர் அனலை கிராமத்தைச் சேர்ந்தவராம்.

வைத்தியரின் வீட்டை பொலீஸார் சோதனையிட்டபோது, அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு லட்சம் வெடி குண்டுகளும் பல துப்பாக்கிகளும் பலவித மருந்துப் பொருள்களும் ஈழப் போராளிகளின் சீருடைகளும், தொலைத் தொடர்பு சாதனங்களும் கைப்பற்றப்பட்டன என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

அம் மருத்துவரின் பெயர் கோபாலகிருஷ்ணன். அவரின் வீடு ஆயுதக் கிடங்காக மட்டுமல்லாமல், இலங்கையில் போராளிகள் வந்து தங்கிச் செல்லும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம் மருத்துவர், ராஜீவ் கொலையுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

[உ-எ]

### இன்று

அவசரகால சாரணர் சேவையில் ஈடுபட்டிருந்த சகல சாரணர்கள், சாரணத் தலைவர்கள், குருளை சாரணத் தலைவர்கள், சாரண முக்கியஸ்தர்கள் மற்றும் வீதிகளில் சேவை புரிந்த பரியோவான் முதலுதவிப் படைப் பிரிவினர் அனைவரையும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 'பாலம்' பொதுப் பணிமன்றத்தில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

[ஓ-5]

## வெலிக்கந்தை தாக்குதலில் ஐந்து அதிகாரிகளும் மரணம்

மட்டக்களப்பு மாவட்டம்- வெலிக்கந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட 24 படையினரில் மூவர் அதிகாரிகள் ஆவர்.

பின்னர் நடந்த சண்டையில் மேலும் இரு அதிகாரிகள் உயிரிழந்தனர்.

கப்டன் ஷாந்தா எதிரிசிங்க, லெப்டினன்ட் அஜித் சந்திரசிறி, லெப்டினன்ட் வீரசிரி சில்வா ஆகியோரே அவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

வடமுனை முகாமைச் சேர்ந்த கப்டன் எதிரிசிங்க தலைமையில் படையினர் சென்றுகொண்டிருந்த டிராக்டர் வெலிக்கந்தைப் பட்டினத்தில் இருந்து அரை மைல் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகளின் திடீர்த் தாக்குதலுக்கு இலக்கானது. அந்த டிராக்டரிலிருந்த படையினர் அனைவரும் கொல்லப்பட்டனர்.

அவர்களின் உதவிக்குச் சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையே அன்று இரவு 8-45 மணிவரை சண்டை நீடித்ததாகவும், உதவிக்குச் சென்ற படையில் இருந்த இரண்டு அதிகாரிகளும் அப்போது கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-எ)

## சாவகச்சேரி நோக்கி ஸ்ரீலங்காப் படை நகருமாம்

கொழும்பு, ஆக. 7

ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றியுள்ள ஐந்து மைல் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசுப் படையினர் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர் என்றும்—

அம்முயற்சிக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர் என்றும்—

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில்—

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் படையினர் தமது நிலையைப் பலப்படுத்திக் கொண்ட பின்னர் இராணுவ அதிரடிப் படையினர் சாவகச்சேரியை நோக்கி நகர்வர் என்று இராணுவ வட்டாரங்கள் கூறின.

இப்படி 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

[இ-எ]

## ஜபா அணியின் 7 ஆவது தொண்டர்படை அழைப்பு

ஸ்ரீலங்கா இராணுவத்தின் கஜபா அணியின் ஏழாவது தொண்டர் படையை தீவிர சேவைக்கு அழைக்கும் பிரகடனம் ஒன்றை ஜனாதிபதி பிரேமதாச நேற்று விடுத்தார்.

இத்தகவலை சபாநாயகர் எம். எச். முஹம்மது நேற்று நாடாளுமன்றம் கூடியபோது வெளியிட்டார்.

நாட்டில் குழப்பங்கள் ஏற்படும்போது தடுப்பதற்கும், குழப்பங்களை அடக்குவதற்கும் ஏதுவாக இந்தப் பிரகடனம் வெளியிடப்படுவ[தா]தாகவும் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

ராஜீவ் கொலை விசாரணை :

# கைதான ஈழத் தமிழர்கள் அந்தமான் தீவுகளுக்கு!

புதுடில்லி, ஆகஸ்ட் 7

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைதாகியுள்ள ஈழத் தமிழர்கள் அனைவரையும் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்குக் கொண்டு சென்று அங்கு காவலில் வைக்க இந்திய மத்திய அரசு முடிவுசெய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கைதான இலங்கைத் தமிழர்கள் இந்திய புலனாய்வாளரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் -

இச் சந்தேக நபர்களைக் கொல்ல ஈழப் போராளிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என இந்திய புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளன என்றும் புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்தே சந்தேகநபர்களை அந்தமான் நிக்கோபார் தீவுகளில் காவல் வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்று 'சண்டே ரைம்ஸ்' புதுடில்லி வட்டாரங்களை ஆதாரங்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

## போராளிகளுடன்தொடர்புள்ள 2,000 தமிழர் வட இந்தியாவுக்கு

### மத்திய - மாநில அரசுகள் இணக்கம்

சென்னை, ஆகஸ்ட் 7

இலங்கைத் தமிழ்ப் போராளிகளுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் சுமார் இரண்டாயிரம் இலங்கைத் தமிழரை வட இந்திய மாநிலங்களில் தங்கவைப்பது என்று தமிழக அரசும் புதுடில்லி அரசும் உடன்பட்டுள்ளன.

இப்படி புதுடில்லித் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

இதே வேளை—

தகுந்த பயண ஆவணங்கள் இன்றி இந்தியாவில் தங்கியுள்ள போராளிகள் எனச் சந்தேகிக்கப்படும் இலங்கைத் தமிழர் மீது பாஸ்போர்ட் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர புதுடில்லி அரசு முடிவு செய்திருக்கிறது.

பிணையில் அவர்கள் விடுவிக்கப்படுவதைத் தவிர்க்குமுகமாகவே இந்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

இப்படி முன்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் சுமார் 600 இலங்கைத் தமிழர் தப்பிச் சென்றுவிட்டனர் என தெரிவிக்கப்பட்டுவதாக செய்திகள் கூறுகின்றன.

(இ-எ)

## ஈழ அகதிகளில் ஒரு பகுதி வேறு மாநிலங்களுக்கு!

### அனுப்ப ஜெயலலிதா முயற்சி

சென்னை, ஆக. 7

தமிழகத்தில் தற்சமயம் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளில் ஒரு பகுதியினரை வேறு மாநிலங்களுக்கு இடமாற்றம் செய்யும்படி மாநில முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா புதுடில்லி அரசைக் கேட்டிருக்கிறார்.

வேறு மாநிலங்களுக்கு அவர்களை இடமாற்றம் செய்ய இயலாத பட்சத்தில் அவர்களை ஐ. நா. உதவியுடன் இலங்கைக்கே திருப்பி அனுப்பி வைக்கும்படியும் செல்வி ஜெயலலிதா மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்.

எனினும் இந்தியாவில் உள்ள வேறு மாநிலங்கள் தமிழ் அகதிகளை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை என்று புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெங்களூரில்

## சயனைட் அருந்திய மற்றவரும் மரணமானார்

பெங்களூா, ஆக. 7

பெங்களூரில் அண்மையில் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த இலங்கைத் தமிழ்ப் போராளி ஒருவர், சிகிச்சை அளித்தும் மயக்கம் தெளியாமலேயே நேற்று முன்தினம் மருத்துவ மனையில் மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் குள்ளத்தான் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தாராம்.

அந்த நபருடன் சயனைட் அருந்திய இன்னொரு தமிழ்ப் போராளி அந்த இடத்தில் வைத்து அன்றைய தினமே மரணமானார்.

(இ-எ)

## கொழும்பில் சவூதி தூதரகம்

கொழும்பு, ஆகஸ்ட் 7

சவூதி அரேபியா தனது தூதரகம் ஒன்றை விரைவில் கொழும்பில் திறக்க உள்ளது.

[இ-எ]

## ஒரு வழி பயணம் மட்டுமே!

கொழும்பு, ஆக. 7

வவுனியா மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் தற்போது இல்லாதிருந்தபோதும், வடபகுதியிலிருந்து வவுனியாவுக்கு எவரும் பயணம் செய்வதில்லை என்றும்—

அதேசமயம் வவுனியாவில் இருந்து வடபகுதிக்கு பொது மக்கள் செல்கிறார்கள் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஓ-எ)

## புத்தளம் தாண்டவும் தடை!

வட பகுதிக்கு எடுத்துச் செல்ல தடை செய்யப்பட்டிருக்கும் பற்றரிகள், யூரியா உரம் உட்பட மற்றைய பொருள்களை புத்தளம் மாவட்டத்தின் எல்லையைத் தாண்டிக் கொண்டு செல்வதும் தடை செய்யப்பட்டிருக்கிறதாம்;

இவ்வாறு கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

(உ-எ)

## கொட்டடியில் மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 7

ஆனையிறவு பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த போராளிகளான சுரேஷ் (சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன் - கொட்டடி, யாழ்ப்பாணம்), அலன் (கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன்- மட்டக்களப்பு) ஆகிய இருவரதும் புகழுடல்கள் நேற்று யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

பின்னர் புகழுடல்கள் கோப்பாயில் உள்ள மாவீரர் [illegible] பட்டன.

(ஓ-5315)

## நீதிவானிடம் ஜீவனாம்சம் கேட்கிறார் பெண் நீதிவான்!

முன்னாள் பெண் நீதிவான் ஒருவர் ஆண் நீதிவான் ஒருவருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்!

இவ்வழக்கு கொழும்பு (பெண்) மேலதிக நீதிவான் ஷிரோமி பெரேரா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

விசாரணைக்கு வழக்கு எடுக்கப்பட்டபோது, பிரதிவாதியான ஆண் நீதிவான் நீதிமன்றத்தில் சமுகமளிக்கவில்லை.

அவரைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை நாளை (ஆகஸ்ட் 8) வரை ஒத்திவைத்தார் வழக்கை விசாரிக்கும் மேலதிக நீதிவான்.

திருமணம் செய்துகொள்வதாக உறுதியளித்து, தன்னை ஒரு குழந்தைக்கு தாயாக்கிய பின்னர் தன்னைக் கைவிட்டுவிட்டதாக அந்த முன்னாள் பெண் நீதிவான் தனது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

தனது குழந்தையைப் பராமரிப்பதற்கு மாதம் 6 ஆயிரம் ரூபா ஜீவனாம்சமாக பெற்றுத் தரும்படி மனுவில் அவர் கோரியுள்ளார்.

(உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org